1982 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

தமிழ்நாடு இரசாயன பொருள்கள் உற்பத்தி நிறுவனத்தால் பெறப்பட்ட கடன்.

*வினா எண் 511—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இரசாயனப் பொருள்கள் உற்பத்தி கம்பெனி உரிமையாளர் தமிழ்நாடு தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன் TIDCO இடம் ரூ. 17.50 லட்சம் வாங்கி திருப்பிக் கொடுக்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) மேற்படி தொகையை வசூலிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இரசாயன பொருள்கள் உற்பத்தி நிறுவனத்தைச் சார்ந்த தனி நபர் எவருக்கும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கடன் வழங்கவில்லை. நிறுவனத்தின் முனைவர் என்ற தகுதியில் நிதி நிறுவனங்கள் தேவைக்கு ஏற்பவும், மேலும் இந்திய தொழில் முன்னேற்ற வங்கியின் வரம்புக்கு உட்பட்டு ரூ. 17·50 இலட்சத்தை "டிட்கோ" பாதுகாக்கப்படாத கடனாக அளித்துள்ளது. இந்த கடனுக்கு வட்டி ஏதும் வசூலிக்கக்கூடாது என்றும் இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கியின் உத்தரவு இல்லாமல் திருப்பி பெறக் கூடாது என்றும் மேற்படி வங்கி கூறியிருக்கிறது. ஆகையால் மேற்படி தொகையை வசூலிப்பது என்ற கேள்வி தற்போது எழவில்லை.

ALONE TRIUMPHS

விவசாயக் கிணறுகள் வெட்ட ஆதி திராவிடர்களுக்கு அளிக்கப்படும் மானியம்.

மாண்[illegible] [illegible]ண் 512—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதி திரா[illegible] [illegible]த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய கிணறுகள் வெட்டுவதற்கு அரிசனங்களுக்கு மானியமாக பணம் வழங்குவது நிலவள வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு கடந்த இரண்டு ஆண்டுகளாகவே அந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வரும் நிதி ஆண்டிலாவது மேற்படி திட்டத்தை அமல் செய்ய மாற்று ஏற்பாடுகள் செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) அறியும்.

(ஆ) இத் திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்நோக்கிய இடர்பாடுகளைக் களைந்து மானியத் தொகையையும் உயர்த்தி ஆணை ஒன்றை அரசு பிப்ரவரி திங்களில் பிறப்பித்துள்ளது.

சந்தவாசல் கிராமத்தில் ஆதி திராவிட மாணவர் இல்லம் அமைத்தல்.

வினா எண் 513—**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு, போளூர் வட்டம், சந்தவாசல் கிராமத் தில் அரிசன மாணவர் விடுதி அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) வடாற்காடு மாவட்டம், போளூர் வட்டம், சந்தவாசல் கிராமத்தில் அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி அமைக்க இது வரையில் கோரிக்கை வரவில்லை.

(ஆ) இது குறித்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரிடம் தொடர்பு கொண்டு தேவையையும் நிதி நிலையையும் முன்னிட்டு தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

தீண்டாமை ஒழிப்புச் சட்டம்.

வினா எண் 514—**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் 1980 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) இந்தச் சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப் படுவதாக அரசுக்கு ஏதேனும் புகார் வந்ததா?